# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 10 புதன்கிழமை 26.11.2025 கதிர் 381



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel






# வல்வெட்டித்துறையில் பேரெழுச்சி! தலைவரின் பிறந்தநாள் நிகழ்வு!!

## பெருமளவான மக்கள் பங்கேற்பு

வல்வெட்டித்துறை, நவ. 26 தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71 ஆவது பிறந்தநாள் நிகழ்வு இன்று யாழ்ப்பாணம், வடமராட்சி, வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

7

## மாவீரர் தினத்தில் யாழில் பொலிஸாரின் கெடுபிடிகள்!



மாவீரர் தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் யாழில் அதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இதன்போது பொலிஸாரின் சில கெடுபிடி சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

7

## படகு கவிழ்ந்து விபத்து: இளைஞன் பலி!

பாலகுடா களப்பில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பாலகுடா பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படகின் இன்ஜின் தொழில்நுட்ப கோளாறுக்கு உள்ளாகியிருந்த நிலையில், அதனை பழுதுபார்த்து பரிசோதனை செய்யச் சென்ற போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தின் போது களப்பில் மூழ்கிய இளைஞரை

7

## பச்சிளைப்பள்ளி பகுதியில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு!

கிளிநொச்சி பச்சிளைப்பள்ளி பளை பகுதியில் இன்றைய தினம் (26) காலை 9:30 மணியளவில் பளை பிரதான பேரூந்து தரிப்பிடத்தின் அருகாமையில் மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கௌரவிப்பு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இவ் கௌரவிப்பு நிகழ்வில் மாவீரர் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் மங்கள வார்த்தை

7





# உடனடியாக தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை ஸ்தாபியுங்கள்!



கொழும்பு, நவ.26

அரசியலமைப்பில் நமது நாடு ஜனநாயக நாடாக பலப்படுத்தப்பட்டுள்ளது. இதை நடைமுறையில்யதார்த்தமாக்குவது சகலமக்களுமானநம்மனைவரினதும் பொறுப்பாகும்.

இனங்கள் மதங்களுக்கு இடையில் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பலப்படுத்த பழமைவாதக் கருத்துக்களுக்கு அப்பால்சென்றதனித்துவமானபணி எம்முன்னால் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நமது நாட்டிற்கு தேசிய மற்றும் மத ஒற்றுமை முக்கியமானதாக அமைந்து காணப்படுகின்றன. அரசியலமைப்பின் மூலம் பௌத்த மதத்திற்கு சிறப்பிடம் வழங்கப்பட்டுள்ளது.

பௌத்தமதத்தை போஷித்து வருவது போலவே பிற மதங்களுக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பும், உரிய ஸ்தானமும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இது இவ்வாறு நடக்கும் பட்சத்தில் மத ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் மேலோங்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சங்கைக்குரிய பேராசிரியர் பல்லேகந்த ரத்தினசார மகாநாயக்க தேரருக்கு இலங்கை அமரபுர மகா பீடத்தின் வஜிரவங்ச பிரிவின் மகாநாயக்கர் பதவிக்கான ஸ்ரீ சன்னஸ் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானம், சகோதரத்துவம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு சூழ்நிலைகளில் எழும் சவால்களை எதிர்கொள்வதற்கும் தேசிய ஒருமைப்பாட்டு குழுவை ஜனாதிபதி தலைமையில் ஸ்தாபித்து, சர்வ மதத் தலைவர்கள் மற்றும் சர்வ கட்சி பிரதிநிதிகள் பங்கேற்புடன் இதனை முன்னெடுக்க வேண்டும்.

ஜனநாயக சமூகத்தில் மதத்தையும் இனத்தையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது குறுகிய மனப்பான்மை கொண்ட நடவடிக்கையாக அமையும்.

குறுகிய கால பிரபலத்திற்காக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நெருக்கடிகளை பிரச்சினைகளை உருவாக்கி, தூண்டி விட்டு நாட்டின் ஒற்றுமைக்கு சவால் விடுக்கப்படுவதனால், இந்த சவால்களை வெற்றி கொண்டு ஒற்றுமை சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

தற்போதைய பல்வேறு போக்குகள் காரணமாக, பௌத்தத்திற்கு சவால்கள் காணப்படுகின்றன. பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் ஊடாக பௌத்தத்தை பல்வேறு வழிகளிலும் திரிவு படுத்தி அதன் உண்மையான போதனைகளை மழுங்கடிக்கச் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றுக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும். குறைந்து வரும் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

இளையதலைமுறையினரை மதத்தலங்களுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் நாட்டில் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் சௌபாக்கியம் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)



# தமிழினத்தின் இறைவன் பிரபாகரன்! நாடாளுமன்றில் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த ரவிகரன் எம்.பி



மேதகுவின் ஆட்சியில் தமிழர் தாயகப்பரப்பில் கடற்றொழில், விவசாயம் என்பன தன்னிறைவு பெற்றிருந்ததாகவும், போதைப்பொருட்கள் அறவே அற்ற, பாதுகாப்பான சூழல் இருந்ததாகவும் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், எனவேதான் அவரை தமிழ் மக்கள் இறைவனாகப் போற்றுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்தோடு தமிழ் இனத்தின் இறைவனான வே.பிரபாகரனுக்கு தனது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் பாராளுமன்றில் இன்று தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“ஆழக் கடல் எங்கும், சோழ மகராஜன் ஆட்சிபுரிந்தானே அன்று தமிழீழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று காலை விடிந்ததென்று பாடு சங்க காலம் திரும்பியது ஆடு”

தமிழ் இனத்தின் தேசியத் தலைவனது ஆட்சியை வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகப்பரப்பில் வாழ்ந்த தமிழ் மக்கள் இவ்வாறாகத்தான் கொண்டாடினார்கள்.

மேதகுவின் ஆட்சியில் கடலிலே இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களும் அடாவடிகளும் இருக்கவில்லை. சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இருக்கவில்லை. மீனவர்கள் மகிழ்ச்சியாகக் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

காணி அபகரிப்புக்களும் இல்லை. எனவே தமிழர் தாயகம் விவசாயத்திலும் செழித்திருந்தது. போதைப் பொருட்கள் அறவே இல்லை. நள்ளிரவிலும் பெண்கள் சுதந்திரமாக உலவக்கூடிய நிலையிருந்தது. தாயகப்பரப்பில் மக்கள் தன்னிறைவு பெற்று பாதுகாப்பாக வாழ்ந்தனர்.

எனவேதான் தமிழ் மக்கள் மேதகு அவர்களை இறைவனாகவும், அவரது ஆட்சிக் காலத்தினைச் சங்ககாலமாகவும் போற்றுகின்றனர்.

அந்த தமிழ் இனத்தின் இறைவனுக்கு இன்று பிறந்தநாள். இந்த உயரிய சபையிலே மேதகு அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)



## நுகேகொடைக் கூட்டம் வெற்றி அச்சுறுத்தி எம்மை அடக்க முடியாது..! மொட்டுக் கட்சி ஆவேசம்

கொழும்பு, நவ.26

அச்சுறுத்தல்கள் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது என முன்னாள் இராஜாங்க அமைச்சருமான இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தேசிய மக்கள் சக்தி அரசு நிறைவேற்றவில்லை என்பதாலேயே எமக்கு வீதிக்கு இறங்கி அதனை நினைவுபடுத்த வேண்டி ஏற்பட்டது.

அந்தவகையில் எமது நுகேகொடைக் கூட்டம் வெற்றியளித்தது. மக்களுக்காக எமது அரசியல் நடவடிக்கை தொடரும். அச்சுறுத்தல் மூலம் எவரும் எமது பயணத்தைத் தடுக்க முடியாது.

மக்களின் குறை கேட்கும் தலைவராக நாமல் ராஜபக்சவே தற்போது விளங்குகின்றார்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசிடம் மீண்டும் வலியுறுத்துகின்றோம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## காதலனின் வீட்டில் கைவரிசை காட்டிய காதலி

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள காதலனின் வீட்டில் நகை திருடிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியை சேர்ந்த யுவதி ஒருவர் சாவகச்சேரி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியை சேர்ந்த இளைஞனும் கிளிநொச்சியைச் சேர்ந்த யுவதியும் காதலித்து வந்துள்ளதுடன் இருவருக்கும் திருமணத்திற்கான நாள் நிச்சயிக்கப்படடிருந்த நிலையில் காதலி சில நாட்களாக காதலனின் வீட்டில் தங்கியுள்ளார்.

இந்த நிலையில் காதலனின் வீட்டில் தாய் வைத்த தாலிக்கொடி உட்பட 8 பவுன் தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக காதலனின் தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

அதற்கமைய சாவகச்சேரி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கிளிநொச்சியில் இருந்து வந்து காதலன் வீட்டில் தங்கியிருந்த காதலி, சாவகச்சேரியில் உள்ள காதலன் வீட்டில் வைத்து புதன்கிழமை (25) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் தாலிக்கொடியை சாவகச்சேரியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அடைவு வைத்ததாகவும் மீதி நகைகளை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்துள்ளதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் டிக்டொக் சமூக வலைத்தளத்தில் உள்ள நண்பர் ஒருவரின் உதவியுடன் இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் இதுவரையில் 27 இலட்சம் ரூபாய் செலுத்தியுள்ளதாகவும் மேலதிக பணம் செலுத்துவதற்காக காதலன் வீட்டில் திருடியதாகவும் குறித்த பெண் கூறியுள்ளார்.

இதே போன்று அண்மை நாட்களில் வேறு சில சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பாக இளம் யுவதி ஒருவர் தனது நகையை விற்பனை செய்து இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டதுடன் நகை திருட்டு போயுள்ளதாக பொய் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

எனவே பொதுமக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் இணைய மோசடி தொடர்பில் மிக அவதானமாக இருக்குமாறு சாவகச்சேரி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மூவர் கைது

*சுமார் 1 கோடி 78 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்து, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற மூவர் விமான நிலைய பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*


*சந்தேக நபர்கள் அளுத்கம,யட்டியந்தோட்டை மற்றும் மாவனெல்லை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் என தெரியவந்துள்ளது.*

*குறித்த மூவரும் செவ்வாய்க்கிழமை (25) காலை துபாய் எமிரேட்ஸ் விமானமான நுமு-648 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.*

*அவர்களின் பயணப்பைகளை சோதனையிட்ட போது 119,000 “பிளாட்டினம்” சிகரெட்டுகள் அடங்கிய 595 அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*சந்தேக நபர்களை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது மூவருக்கும் தலா 03 லட்சம் ரூபாய் மற்றும் 09 லட்சம் ரூபாய் அபராதம் செலுத்த நீதவான் உத்தரவிட்டார்.*

# நாட்டில் 365,951 பேர் வேலையற்றிருப்பதாகப் பிரதமர் அறிவிப்பு



கொழும்பு, நவ.26

நாட்டில் தற்சமயம் மூன்று இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொரு (365,951) பேர் வேலையின்றி இருப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (26) பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 2024 ஆம் ஆண்டின் தொழிலாளர் படை அறிக்கைக்கு அமைய, 2024 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 4.5 ஆக இருந்த வேலையின்மை வீதம், 2025 இல் 3.8 வரை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 4.7 ஆகக் காணப்பட்ட வேலையின்மை வீதம், 2025 ஆம் ஆண்டில் 3.8 வரை குறைவடைந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், கல்வித் தகைமைகளுக்கு அமைய வேலையற்றுள்ளவர்களின் எண்ணிக்கையில் க.பொ.த சாதாரண தரத்திற்குக் கீழுள்ளவர்கள் ஒரு இலட்சத்து மூவாயிரத்து முன்னூற்று எட்டு (103,308) பேர் எனவும், க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்கள் தொண்ணூற்று ஓராயிரத்து நானூற்று ஐந்து (91,405) பேர் எனவும் குறிப்பிட்டார்.

க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த ஒரு இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொளாயிரத்து என்பத்து நான்கு (128,984) பேர் இவ்வாறு வேலையற்றுள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகளைக் கொண்ட 42,254 பேர் வேலையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே 12,000 இற்கும் அதிகமான பட்டதாரிகளுக்கு இதுவரை வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே ஏனையவர்களுக்கும் வேலைவாய்ப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

ஆசிரியர் நியமனம் தொடர்பான வழக்குகள் தற்போது முடிவுக்கு வந்துள்ளதாகவும், மேன்முறையீட்டு நீதிமன்றினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட உடனேயே ஆட்சேர்ப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார். (ஐ)

# சொன்னதை செய்கிறவன் நான் இதுவே சாட்சி என சொல்கிறார் முதல்வர் ஸ்டாலின்



சொன்னதை செய்கிறவன் நான் என்பதற்கு இந்த மாவீரன் பொல்லான் சிலையே சாட்சி என ஈரோட்டில் நடந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில் தெரிவித்தார்.

ஈரோட்டில் மாவீரன் பொல்லான் சிலையை திறந்து வைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: மாவீரன் பொல்லானின் சிலையை திறந்து வைத்ததில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் வீரமடைகிறேன். எழுச்சி அடைகிறேன். மாவீரன் பொல்லானுக்கு சிலையுடன் மணி மண்டபம் அமைப்போம் என்று சொன்னேன் இன்று திறந்து வைத்துள்ளேன். சொன்னதை செய்கிறவன் நான் என்பதற்கு இந்த மாவீரன் பொல்லான் சிலையே சாட்சி.

தீரன் சின்ன மலையின் நம்பிக்கைக்கு உரிய தளபதியாக இருந்தவர் மாவீரன் பொல்லான். அருந்ததியினருக்கான உள் ஒதுக்கீடு சட்டத்தால் மருத்துவம், பொறியியல், சட்டம், கலைக்கல்லூரிகள் என அருந்ததியின மாணவர்கள் அதிக இடங்கள் பெற்று வாழ்வில் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள். லட்சகணக்கான அருந்ததியின மக்களின் வாழ்க்கையில் திமுக அரசு ஒளியேற்றி இருக்கிறது. ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான கட்டமைப்பில் என்னுடைய பங்கு இருந்ததை எண்ணி பெருமை அடைகிறேன்.

அருந்ததியினர் மக்களுக்கு திமுக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி உள்ளது. கோவை, திருப்பூர், சேலம், ஈரோடு, கரூரில் அருந்ததியின மாணவர்களுக்கு 26 விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தான் உண்மையான வளர்ச்சி. எல்லாருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் லட்சியத்தை நிறைவேற்றுவோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். (ஐ)

## சூடு பிடிக்கிறது அரசியல் களம் எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார் செங்கோட்டையன்



நடிகர் விஜயின் தமிழக வெற்றி கழகத்தில் இணையவிருக்கும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தனது எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்தார்.

முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், அதிமுகவின் ஆரம்ப கால உறுப்பினர்களில் ஒருவர். ஈரோடு மாவட்டத்திலிருந்து 9 முறை எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டவர். அதிமுகவில் அமைச்சராகவும் கட்சியில் பல்வேறு பொறுப்புகளிலும் பணியாற்றியவர். அவருக்கும் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்..க்கும் சில மாதங்களாக கருத்து வேறுபாடு நிலவி வந்தது.

இந்நிலையில் ஓபிஎஸ் டிடிவி தினகரன் உள்ளிட்டோரை கட்சியில் மீண்டும் இணைக்க வேண்டும் என்று கூறிய செங்கோட்டையன், அதற்கு கட்சி தலைமைக்கு காலக்கெடு விதித்தார்.

இதனால் அவரது கட்சி பதவிகள் பறிக்கப்பட்டன. ஓபிஎஸ், டிடிவி தினகரன், சசிகலா ஆகியோருடன் தேவர் குருபூஜை விழாவில் செங்கோட்டையன் கலந்து கொண்டதைத் தொடர்ந்து, அதிமுகவில் இருந்தும் அவர் நீக்கப்பட்டார்.

இந் நிலையில், செங்கோட்டையன் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்தில் இணைய முடிவு செய்துள்ளார். இதுவரை வெளிப்படையாக அவர் அறிவிப்பு எதுவும் வெளியிடாத நிலையில், இன்று தனது எம்எல்ஏ பதவியை செங்கோட்டையன் ராஜினாமா செய்தார். சட்டசபை வளாகத்துக்கு வந்த அவர், தனது ராஜினாமா கடிதத்தை, சபாநாயகர் அப்பாவு இடம் இன்று வழங்கினார். அடுத்த கட்ட முடிவு பற்றி செய்தியாளர்கள் கேட்டபோது, "இன்னும் ஒரு நாள் பொறுத்திருங்கள்," என்று கூறினார்.

செங்கோட்டையன், 1977 முதல் 10 முறை சட்டசபை தேர்தல்களில் போட்டியிட்டுள்ளார். இதில் 1996 தேர்தலில் மட்டும் தோல்வியை தழுவியுள்ளார். மற்ற அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளார்.

முதல் தேர்தலான 1977 தேர்தலில் மட்டும் சத்தியமங்கலம் தொகுதியில் போட்டியிட்டவர், அதன் பிறகு தொடர்ந்து கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தான் போட்டியிட்டு வந்துள்ளார்.

1991ல் ஜெயலலிதா முதல் முறை முதல்வர் ஆனபோது, செங்கோட்டையனுக்கு போக்குவரத்து துறையில் அமைச்சர் பதவி வழங்கினார்.

2011ல் ஜெயலலிதா முதல்வராக பதவியேற்றபோது, செங்கோட்டையனுக்கு வேளாண் அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. ஆனால், ஒரு சில மாதங்களிலேயே அவரது அமைச்சர் பதவி பறிக்கப்பட்டது. அதன்பிறகு, ஜெயலலிதா இறந்து, இபிஎஸ் முதல்வர் ஆன பிறகே செங்கோட்டையனுக்கு அமைச்சர் பதவி திரும்பக் கிடைத்தது. (ஐ)



## பா.ஜ..வின் ஊதுகுழலாக முழங்குகிறார் கவர்னர் மீது அமைச்சர் ரகுபதி பாய்ச்சல்

தமிழகத்தை இழிவுபடுத்துவதையே, கவர்னர் ரவி, தன் தொழிலாகக் கொண்டிருக்கிறார். பா.ஜ.,வின் ஊதுகுழலாக முழங்கி வருகிறார்.

'திராவிடம் என்பது கற்பனை. தமிழகத்தில் பீஹாரிகள் அச்சுறுத்தப்பட்டனர். தமிழகத்தில் மொழி சிறுபான்மையினர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன' என, கவர்னர் தெரிவித்துள்ளார்.

திராவிடம் என்பது கற்பனை என்றால், நம் தேசிய கீதத்தில் திராவிடம் இடம்பெற்றிருப்பது, கவர்னருக்கு தெரியாதா? பீஹாரிகள் அச்சுறுத்தப்படுகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிற வகையில் உள்ளது என, பொய்யான கட்டுக்கதைகளை அவிழ்த்து விட்டுள்ளார்.

தமிழகத்தில் வாழும் பீஹார் மக்கள், 'எங்களுக்கு நல்ல பொருளாதாரம் கிடைக்கிறது. பாதுகாப்பாக, வசதியான வாழ்க்கை வாழ்கிறோம்' என தெரிவிக்கின்றனர்.

ஒடிசா தேர்தலில், 'ஒடிசாவை தமிழன் ஆள வேண்டுமா? ஒடிசாவின் சாவி தமிழகத்தில் இருக்கிறது' என, தமிழர்களை திருடர்கள் போல் பிரதமர் மோடியும், அமித் ஷாவும் குற்றம் சுமத்தினர். தமிழர்கள் என்ன திருடர்களா? தமிழகம் குற்ற வாளிகள் பிறப்பிடமா.

தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்படும்போது, பிரதமர், உள்துறை அமைச்சர் அல்லது கவர்னர் ஏதேனும் அறிக்கை வெளியிட்டிருப்பரா. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



## வாய்க்கு வந்ததை விஜய் பேசுகிறார்: பொன்முடி எம்.எல்.ஏ., கிண்டல்

த.வெ.க., விஜய், ஒரு கட்சியை துவக்கி விட்டு, வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி வருகிறார் என, முன்னாள் அமைச்சர் பொன்முடி, கிண்டலாக கூறினார்.

அரசு போக்குவரத்து கழக விழுப்புரம் மண்டலம் சார்பில் புதிய மற்றும் 6 புனரமைக்கப்பட்ட வழித்தட பஸ்கள் துவக்க விழா நடந்தது. விழாவில் பங்கேற்ற பொன்முடி எம்.எல்.ஏ., நிருபர்களிடம் கூறியதாவது:


விழுப்புரம் மண்டலத்திற்கு கடந்த 2021ம் ஆண்டு முதல் தற்போது வரை ஒதுக்கீடு செய்த 303 புதிய பஸ்களில் தற்போது வரை 72 மகளிர் விடியல் பஸ்கள், 144 புறநகர் பஸ்கள், 5 மலை வழித்தட பஸ்கள் உட்பட மொத்தம் 221 பஸ்கள் மக்கள் பயன்பாட்டிற்காக இ யக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ள 55 புனரமைக்கப்பட்டுள்ள பஸ்களில் இதுவரை 52 பஸ்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டுள்ளது.

த.வெ.க., விஜய் ஒரு கட்சியை துவக்கி விட்டு, வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுகிறார். இவரை பொறுத்தவரை அரசியலில் என்ன வாக்குறுதிகளை கொடுக்க வேண்டும். இதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பது தெரியாமல் பேசுகிறார். சினிமா நடிகர் தானே அப்படி தான் இருப்பார்.

எஸ்.ஐ.ஆர்., பணிகளில் தி.மு.க., நிர்வாகிகள் அனைவரும் இணைந்து பணிபுரிவதால் சிறப்பாக செயல்படுகிறது என தெரிவித்தார். (ஐ)

# முதல் பெண்கள்!




அவள் விகடன் இதழில் வெளியான " முதல் பெண்கள்" பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு தான் இந்நூல். அணிந்துரையில் ச.ஆனந்தி அவர்கள் மிகவும் விரிவாக மகளிர் இயக்கங்கள் உருவான பின்னணி, வரலாற்றை மறுவாசிப்பு செய்வதற்கான தேவை, மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட வரலாற்றை பரவலாக எடுத்து செல்ல வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

நிவேதிதா லூயிஸ் தனது முன்னுரையில் " ஒவ்வொரு பெண்மணியைப் பற்றியும் ஒற்றை வரி தகவல் மட்டுமே என்னிடம் இருக்கும். முதல் பொறியாளர், முதல் பட்டயக் கணக்காளர்- இப்படி. ஆனால் அந்தப் பெண்மணி குறித்து படிக்க, தகவல் சேகரிக்க, அவரைச் சுற்றிய புகைமூட்டம் விலக ஆரம்பிக்கும், தொலைவில் கோட்டோவியமாக ஒரு பெண்மணி நம் கண்முன் விழித்தெழுவார்."என்று பகிர்கிறார். எங்கோ எப்படியோ காதில் விழுந்த ஒற்றை வரி தகவலை தனது அயராத கள ஆய்வின் மூலம் கட்டுரையாக்கி ஆவணப்படுத்தி இருக்கும் அவரது உழைப்பு போற்றத்தக்கது.

43 பெண்கள் பற்றிய கட்டுரைகளில், சில பெண்களின் பெயர்கள் அதிகமாக தெரிந்திருக்கிறது. சில பெண்களின் பெயர்கள் கேள்விப்பட்டு இருக்கிறோம். பல பெண்களைப் பற்றி இப்பொழுது தான் முதல் முறையாக கேள்விப்படுகிறோம். ஆனால் இந்த பெண்கள் அனைவரும் தாங்கள் வாழ்ந்த காலத்தில் பல்வேறு தடைகளைத் தாண்டி தாங்கள் தேர்வு செய்த பணியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி இருக்கிறார்கள். இன்றில் இருந்து 150 ஆண்டுகளுக்குள் நமது மண்ணில் வாழ்ந்து, சாதிக்கும் ஆர்வத்துடன் செயலாற்றி, சவால்களை சந்தித்து, போராடி, மறைந்த இப்பெண்களின் வாழ்க்கையை வாசிக்க வாசிக்க பிரமிப்பாக இருக்கிறது.

முதல் படுகர் இனப் பட்டதாரிப் பெண் மற்றும் முதல் படுகர் இனப் பெண் நாடாளுமன்ற உறுப்பினரான அக்கம்மா அவர்களைப் பற்றிய கட்டுரை முதலாவதாக அமைந்துள்ளது. சிறுமியான அக்கம்மாவை இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு முன், உதக மண்டலத்தில் ஐந்து மைல் தொலைவில் உள்ள பள்ளிக்கு அவரது தந்தை தோளில் சுமந்து கொண்டு போய் விட்டிருக்கிறார். முதல் படுகர் இனப் பெண் பட்டதாரி ஆன பின்தேச விடுதலைக்கான இயக்கங்களில் பங்கேற்ற அவர், தொடர்ந்து மலைவாழ் பெண்களின் மேம்பாட்டிற்கான பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். அவரது தன்னலம் கருதாத செயல்பாட்டினால், 1962 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் நீலகிரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரது வாழ்க்கை பள்ளிப் பாடத்திட்டத்தில் இடம் பெற வேண்டிய அளவு முக்கியத்துவம் உடையது. நாம் இந்த புத்தகத்தின் வழியாக தான் அவரை தெரிந்து கொள்கிறோம் என்பது வருத்தமே.

இந்திய சாரண சாரணியர் இயக்கத்தின் முதல் பெண் தலைவரும், இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவாகிய போது, அதை விவாதித்து செழுமைப்படுத்தும் அரசியல் நிர்ணய சபையில் செயலாற்றியவருமான அம்மு சுவாமிநாதன் அவர்களின் இளமைக் காலத்தில் ஒரு சம்பவம்.33 வயதான பாரிஸ்டர் சுவாமி நாதனிடம் 13 வயதான அம்மு.. திருமணம் செய்ய இரண்டு நிபந்தனைகளை விதிக்கிறாள். எப்போது வீட்டுக்கு திரும்புவாய் என்று வெளியே செல்லும் போது கேள்வி கேட்கக்கூடாது. என் அண்ணன் தம்பி களை யாரும் இப்படி கேட்பதில்லை. தன்னை மதராஸ் அழைத்துச் சென்று ஆங்கிலேய கவர்னஸ் மூலம் ஆங்கிலம் கற்றுத் தர வேண்டும். அதைக் கேட்க இப்போதே சிறிது தயக்கம் ஏற்படுகிறது. ஆனால் சுவாமிநாதன் பெரு மகிழ்ச்சி அடைந்தார். அம்மு சுவாமிநாதன் தனது வாழ்க்கையை தன் விருப்பப்படி வாழ்ந்தார்.அவர்களது அன்புமகள் லஷ்மி தான் பின்னாளில் மருத்துவராகி, இந்திய தேசிய படைப்பிரிவான ஜான்சிராணி ரெஜிமெண்டின் கேப்டனாக உயர்ந்தார். டாக்டர்.லஷ்மி செஹகல் சிறந்த இடதுசாரி சிந்தனையாளர் மற்றும் செயல்பாட்டாளராக விளங்கினார்.

இந்நூலில் சொல்லப்பட்ட எல்லாப் பெண்களையும் பற்றி இங்கே குறிப்பிடுவது சாத்தியமில்லை என்றாலும் வியக்கத்தக்க வகையில் அறிவுத் துறையில் பெண்கள் பல்லாண்டுகள் முன்பே சாதித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகம் விவரிக்கப்படாதவையும் கூட.

இந்தியாவின் முதல் பெண் குடிமைப் பணி அதிகாரி அன்னா ராஜம் மல்ஹோத்ரா, இந்திய வானியல் ஆய்வு மையத்தின் முதல் பெண் துணை பொது இயக்குநர் அன்னா மானி, முதல் பெண் விமானி உஷா சுந்தரம், மதராஸ் மாகாணத்தின் முதல் பெண் முனைவர் கடம்பி மீனாட்சி, ஆசியாவின் முதல் பெண் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டி.எஸ்.கனகா, இந்தியாவின் முதல் பெண் கால்நடை மருத்துவர்கள், தமிழின் முதல் இஸ்லாமிய பெண் எழுத்தாளர், நாவலாசிரியர் சித்தி ஜ/னைதா பேகம், தென்னிந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர்கள், இந்தியாவின் முதல் பெண் திரைப்பட ஒலிப்பதிவு கலைஞர் என நீளும் இப்பட்டியல் நாம் நினைவுகூர்ந்து கொண்டாடப்பட வேண்டியவர்கள்.

பாலின பாகுபாடு அனைத்து தளங்களிலும் நிரம்பிய ஒரு சமூக அமைப்பில் பல்லாண்டுகளுக்கு முன்னர் இப்பெண்கள் எத்தனை தடைகளைத் தாண்டி வந்திருப்பார்கள். தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்ட முதல் தென்னிந்தியப்பெண் நமது அன்புக்குரிய கே.பி.ஜானகி அம்மாள் என்பதை படிக்கும் போதே நெகிழ்ச்சியாக இருக்கிறது.

தமிழ் அறிவுலக வரலாற்றில் இந்த புத்தகம் மிக முக்கியமான பதிவாகும். ஒரு புத்தகத்தின் அணிந்துரை இத்தனை ஆழமாக, விரிவாக அமைய முடியுமா என்று ஆச்சரியமாக இருப்பினும், அருமையான பதிவு எழுதிய பேரா.ச.ஆனந்தி அவர்களுக்கு வாழ்த்துக்கள். ஒரு கட்டுரை தொடர் எழுத தன் அதிகபட்ச உழைப்பை செலுத்தி, ஒவ்வொரு சிறு தகவலுக்கும் முக்கியத்துவம் அளித்து, சுவாரஸ்யமான நடையில் 43 சாதனைப் பெண்களின் வாழ்வை ஆவணப்படுத்திய நிவேதிதா லூயிஸ் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். அவருக்கு தமிழ் சமூகம் என்றும் கடன் பட்டிருக்கிறது. சமூக அக்கறை உள்ள ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய புத்தகம்.

# அமெரிக்காவின் மாற்றியமைக்கப்பட்ட அமைதி திட்டம் உக்ரைன் அதிபர் வரவேற்பு



ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கு தயார் செய்யப்பட்டு வரும் அமெரிக்காவின் மாற்றியமைக்கப்பட்ட அமைதி திட்டத்திற்கு உக்ரைன் வரவேற்பு தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர 28 அம்சங்களைக் கொண்ட அமைதி திட்டத்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் பரிந்துரை செய்தார். இந்த திட்டத்தை நவ.27ம் தேதிக்குள் ஏற்க வேண்டும், இல்லாவிட்டால் அந்நாடுக்கு அளித்து வரும் ஆதரவை நிறுத்தப் போவதாக டிரம்ப் கெடு விதித்து இருந்தார்.

டிரம்ப்பின் இந்தப் பரிந்துரைகள் ரஷ்யாவுக்கு சாதகமாகவும், உக்ரைனுக்கு பாதகமாகவும் இருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியிருந்தார். இதனால், அமைதி திட்டத்தில் இடம்பெறும் அம்சங்கள் குறித்து ரஷ்யா மற்றும் உக்ரைன் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இருதரப்பினரின் கருத்துக்களைக் கேட்டு, அதனடிப்படையில் அமைதி திட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அமைதி திட்டத்தில் மாற்றியமைக்கப்பட்ட அம்சங்கள் ரஷ்யாவுடனான போரை நிறுத்துவதற்கான மிக ஆழமான ஒப்பந்தம் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது அமெரிக்கா தலைமையில் உருவாக்கப்படும் அமைதி ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள அம்சங்கள், போரை நிறுத்துவதற்கான ஆழமான ஒப்பந்தங்களாக விரிவுபடுத்த முடியும். இந்த விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் அதிபர் டிரம்பிடம் மேலும் தீவிர ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன். அமெரிக்காவின் பலத்திற்கேற்ப ரஷ்யா செயல்பட்டு வருகிறது. அமைதி திட்டத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து அதிபர் டிரம்புடன் ஆலோசனை நடத்த தயாராக உள்ளேன்.

அமைதி திட்டம் ஐரோப்பா பாதுகாப்பு முடிவுகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதால் ஐரோப்பிய தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும், இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## பாகிஸ்தானின் வான்வழி தாக்குதலில் ஆப்கனில் 9 குழந்தைகள் உட்பட 10 பேர் பலி



பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில், ஆப்கானிஸ்தானை சேர்ந்த, 9 குழந்தைகள் உட்பட, 10 பேர் கொல்லப்பட்டனர்.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானுக்கும், நம் அண்டை நாடான பாகிஸ்தானுக்கும் சமீபகாலமாக மோதல் நிலவி வருகிறது. ஆப்கனில் இருந்து செயல்படும் டி.டி.பி., எனப்படும், தெஹ்ரீக் – இ – தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பு, பாகிஸ்தானை குறி வைத்து அவ்வப்போது தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த தாக்குதல், ஆப்கன் தலிபான் அரசின் ஆதரவுடன் நடப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது–. மேலும், சமீபத்தில் ஆப்கனின் எல்லை தாண்டிச் சென்று பாகிஸ்தான் வான்வழி தாக்குதல் நடத்தியது. அதில் டி.டி.பி.,யின் முக்கிய தலைவரின் மகன் கொல்லப்பட்டார்.

இதையடுத்து, எல்லை தாண்டி வந்து தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு ஆப்கன் கண்டனம் தெரிவித்தது.

இதுமட்டுமின்றி, இருநாட்டு எல்லைக் கோடு பகுதியான டூரண்டோ பகுதியில் இருதரப்பும் அவ்வப்போது மோதிக் கொள்கின்றன.

இந்நிலையில், ஆப்கனின் கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு முழுதும் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குலில் ஒன்பது குழந்தைகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டதாக ஆப்கன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இத்தாக்குதல் குறித்து பாகிஸ்தான் அரசும், ராணுவமும் இதுவரை எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.

நேற்று முன்தினம் காலை கைபர் பக்துங்க்வா மாகாணத்தின் தலைநகர் பெஷாவரில் உள்ள ராணுவ தலைமையகத்தை குறி வைத்து, பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் மூன்று ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர் 11 பேர் காயமடைந்தனர்.

இதற்கு பதிலடியாக, பாகிஸ்தான் இந்த வான்வழி தாக்குதலை நடத்தியிருக்கலாம் என கூறப்படுகிறது. (ஐ)




## காலிஸ்தான் ஆதரவு ஓட்டெடுப்பில் இந்திய தேசிய கொடிக்கு அவமதிப்பு

கனடாவில் நடந்த அதிகாரப்பூர்வமற்ற, 'காலிஸ்தான் ஆதரவு ஓட்டெடுப்பு' நிகழ்வில், இந்தியாவுக்கு எதிரான கோஷங்களும், நம் தேசிய கொடியை அவமதித்த நிகழ்வும் நடந்தது இந்தியர்களிடையே அதிர்ச்சியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

நம் நாட்டின் பஞ்சாப் மாநிலத்தை பிரித்து, 'காலிஸ்தான்' என்ற தனி நாடு உருவாக்க வேண்டும் என, காலிஸ்தான் தீவிரவாதிகள் குரல் கொடுத்து வருகின்றனர். இவர்கள் வட அமெரிக்க நாடான கனடாவில் இருந்தபடி, இந்தியாவில் பல நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், காலிஸ்தான் தனிநாடு உருவாக்குவதை ஆதரிக்கிறீர்களா என்பது குறித்து, கனடா தலைநகர் ஒட்டாவாவில், அதிகாரப்பூர்வ ஓட்டெடுப்பை, எஸ்.எப்.ஜே., எனும் நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு நடத்தியது.

இந்த அமைப்பு, சட்ட விரோத நடவடிக்கை தடுப்பு சட்டத்தின் கீழ், இந்தியாவில் தடைசெய்யப்பட்ட காலிஸ்தான் ஆதரவு அமைப்பு.

இந்த ஓட்டெடுப்பு முடிவடைந்தபோது, அங்கிருந்த சிலர், நம் தேசிய கொடியை அவமதித்த காணொளிகள் மற்றும் செய்தி ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. மேலும், இந்திய அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகளை குறி வைத்து, 'கொலை செய்' என்ற கோஷங்களை எழுப்பியதாக கூறப்படுகிறது.

அங்கு பாதுகாப்புக்காக நின்றிருந்த போலீசார் முன்னிலையில் இக்கோஷங்கள் மற்றும் கொடி அவமதிப்பு நிகழ்ந்த போதிலும், அவர்கள் கூட்டத்தினரை கட்டுப்படுத்தும் பணியில் மட்டுமே ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், காலை 10:00 மணி முதல் மாலை 3:00 மணி வரை நடந்த ஓட்டெடுப்பில், 53,000க்கும் மேற்பட்ட கனடா சீக்கியர்கள் பங்கேற்றதாக எஸ்.எப்.ஜே., தெரிவித்துள்ளது.

ஓட்டெடுப்பின்போது, இந்தியாவால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட எஸ்.எப்.ஜே.,வின் பொது ஆலோசகர் குர்பத்வந்த் சிங் பன்னுன், ஓட்டளித்தவர்கள் முன் வீடியோவில் தோன்றி பேசினார். (ஐ)

## வல்வெட்டித்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)













வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரின் பூர்வீக இல்லக் காணி சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது வெடி கொளுத்திக் கேக் வெட்டி, எள்ளுப்பாகு, இனிப்புகள் என்பன பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும் சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பொதுமக்களுக்கு மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

இதன்போது பெருமளவான ஊர் மக்கள் கலந்துகொண்டு மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டனர்

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் வல்வெட்டித்துறை பகுதியில் நேற்று சோடனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வல்வெட்டித்துறை பொலிஸார் சோதனையில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சிலரின் சிவில் உடை படங்களுடன் வல்வெட்டித் துறையில் கட்டப்பட்ட பதாகையை அகற்ற சொன்ன வல்வெட்டித்துறை பொலிஸார் சிலரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் சின்னங்கள், இலட்சிணைகள் பயன்படுத்தாமல் உயிரிழந்தவர்களை நினைவு கூர முடியும் என அரசாங்கம் அறிவித்திருந்த போதும், ஆட்சி மாறியும் காட்சி மாறவில்லை என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை மல்லாகம் சந்தி பகுதியில் மாவீரர் நினைவேந்தல் தொடர்பில் இலத்திரனியல் உபகரணத்தில் பாடல் ஒலிக்க விடப்பட்டுள்ளது. அவ்விடத்திற்கு வந்த தெல்லிப்பழை பொலிஸார் குறித்த உபகரணத்தை கைப்பற்றி வழக்கு சான்றுப் பொருளாக இலக்கமிட்டுள்ளனர்.

மாவீரர் தினம், நாளை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பொலிஸாரின் கெடுபிடிகள் காணப்படுமா என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## படகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசவாசி கள் மீட்டு சிகிச்சைக்காக கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பச்சிலைப்பள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இசையுடன் வரவேற்கப்பட்டு மாவீரர் பெற்றோரால் நினைவு சுடர் ஏற்றப்பட்டு தொடர்ந்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ் கௌரவிப்பு நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் பச்சிளைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன் பச்சிளைப்பள்ளி

பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவீரர் பெற்றோர் ,மாவீரர் உரித்துடையோர் என பலரும் கலந்து கொண்டனர்.

# தனி ஈழத்துக்கு பாதை அமைப்பதற்கு இடமளித்து விடக்கூடாது! சிங்கள சமூகத்தை எச்சரிக்கும் ஞானசார தேரர்

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் மற்றும் வாழைச்சேனையில் தொல்பொருள் பெயர் பலகைகள் அகற்றப்பட்டமை போன்ற சம்பவங்கள் ஊடாக பௌத்த, சிங்கள சமூகத்தை தூண்டி கோபத்துக்குள்ளாக முயற்சிக்கப்படுகிறது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.



இராஜகிரியவிலுள்ள பொதுபல சேனா அமைப்பின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்ட சம்பவம் பௌத்தர்களின் உணர்வுகளைத் தூண்டும் ஒரு மிக முக்கியமான பிரச்சினையாகும். இதுபோன்ற விஷயங்களைக்கையாளும்போது அரசாங்கம்விவேகத்துடனும் தூரநோக்குடனும் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் பல்வேறு குழுக்களும் சக்திகளும் தமது தேவைக்கேற்ப நிலைமையைக் கையாள இது வழிவகுக்கும். கனடாவில் வசிக்கும் அயூப் அஸ்மின் என்ற நபர் திருகோணமலை சம்பவத்தின் போது தனது முகநூலில் 'நீங்கள் இப்படியே தொடருங்கள், சிலைகளை உடைக்கும் ஒரு இயக்கம் உருவாகும்வரை' எனப் பதிவிட்டிருக்கின்றார்.

இந்த நபர் ஜமாஅத் அமைப்பில் மாணவர் இயக்கத்தின் முன்னாள் தலைவராக செயற்பட்டிருக்கின்றார். அவ்வாறு செயற்பட்ட போது தமிழ் தேசிய கூட்டமைப்புடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டார்.

தேர்தலில் தோல்வியடைந்த போதிலும், பட்டியலூடாக 5 ஆண்டுகள் மாகாணசபை உறுப்பினராகக் காணப்பட்டார். இவர் பிரிவினைவாதத்தை ஆதரிக்கும் மற்றும் நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை கேள்விக்குள்ளாக்கும் ஒரு ஆபத்தான நபராவார். அவர் தலைமை தாங்கிய மாணவர் குழுவே மாவனெல்லையில் உள்ள புத்தர் சிலைகளை அழித்தன.

அஸ்மி உலகளாவிய பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதக் குழுக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்கலாம். இலங்கையை ஒரு முஸ்லிம் நாடாக மாற்ற முயற்சிப்பதுடன், வெளிநாட்டில் இருந்து அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை அதிதீவிரவாதக் கருத்துக்களை நோக்கித் தள்ளுவதாகவும் சந்தேகிக்கின்றோம்.

எனவே நல்லாட்சியின் போது இடம்பெற்றதைப் போன்று உலகளாவிய பயங்கரவாத வலைப்பின்னல்களுடன் தொடர்புடைய நபர்களின் நடவடிக்கைகள் எவ்வாறு விரிவடைந்தன என்பதை விசாரிக்க ஒரு விசேட ஆணைக்குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம்.

பெரும்பான்மை சமூகத்தினருக்கு மனவேதனையை ஏற்படுத்திய நடவடிக்கைகளாலேயே முந்தைய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டு, நாடு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை எதிர்கொண்டது. திருகோணமலை போன்ற சம்பவங்களைத் தொடர்ந்து பௌத்த சிங்கள சமூகத்திலிருந்து வரும் ஆரவாரமும் கோபமும், அதிதீவிரவாதத்தின் ஆரம்ப நிலையில் உள்ளவர்களால் தமக்கான தீவிரவாத கருத்துகளுக்குத் தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களை விரைவாகச் சேர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இளம் பிக்குகள் மற்றும் தேசிய அமைப்புகள் அமைதியாகவும் விழிப்புணர்வுடனும் இருக்குமாறும், பொலிஸால் கையாளப்பட வேண்டிய விடயங்களில் தேவையற்ற விதத்தில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். அவர்களது கோபமான எதிர்வினைகள், அவர்களை இனவாதிகள் அல்லது மத அடிப்படைவாதிகள் என்று முத்திரை குத்த விரும்புபவர்களின் கைகளுக்குள் விளையாட வழிவகுக்கும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் கனடாவில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவாகக் கருத்துக்களைத் தெரிவிக்கப்பட்டன. 30 ஆண்டுகாலப் போருக்குப் பிறகும், விடுதலைப் புலிகள் செய்த பல படுகொலைகளுக்குப் பிறகும் அவர்களை நினைவுகூர வேண்டிய தார்மீக அதிகாரம் இருக்கின்றதா? இந்த புதிய சித்தாந்தங்களை இப்போதே தோற்கடிக்கத் தவறினால், நாடு தவிர்க்க முடியாமல் ஒரு ஆபத்தான நிலைமைக்கு தள்ளப்படும். அத்தகைய சூழ்ச்சிகளுக்குத் தூண்டப்பட அனுமதித்தால், முந்தைய அரசாங்கம் சந்தித்த அதே வீழ்ச்சியை இந்த அரசாங்கமும் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கின்றேன்.

விடுதலைப்புலிகளுடன் இணைந்து அஸ்மின் மீண்டும் வடக்கு, கிழக்கை மற்றொரு பலஸ்தீனாக மாற்றுவதற்கு முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எழுகிறது. தனி ஈழத்துக்கு பாதை அமைக்க இடமளிக்க கூடாது.

13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு பதிலாக அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்படுகிறது. பிரதேசசபையின் அனுமதியின்றி தொல்பொருள் பெயர் பலகையை நிறுவ முடியாது என முரண்படும் நிலைமைக்கு அரசாங்கம் இடமளிக்கின்றதா? இந்த நிலைமைகள் இப்போதே அடியோடு அழிக்கப்பட வேண்டும் என்றார். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2025 வெளியிடப்பெற்றது.